


Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 இதழ்: 280 27.10.2024 பக்கங்கள்:05 editorml21@gmail.com விலை:75/-

# அதிக கடன் வாங்கிய தலைவராக அநுரகுமார திகழ்கிறார்



## திலித் ஜயவீர கிண்டல்

இலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் அதிக கடன் வாங்கிய தலைவராக தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வரலாற்றில் இடம்பிடித்துள்ளார் என்று சர்வஜன சக்தி கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

திலித் ஜயவீர தலைமையில் கணேமுல்ல நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

02 ⏭

# தேங்காய் வாங்குவதற்கு கூட மக்கள் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது



## சஜித் பிரேமதாச

பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால், தேங்காய் வாங்குவதற்கு கூட மக்கள் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாத்துறைக்கு ஆபத்து நேர்ந்துள்ளது. சுற்றுலா நமக்கு அன்னியச் செலாவணியைத் தரும் ஒன்றாக காணப்படுவதால், அது பாதிக்கப்படக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன். இந்நிலையில் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பலமாக விளங்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கும் கூட இது பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

02 ⏭

# நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்



நாட்டின் பாதுகாப்பிற்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் நாமல்ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்றைய தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

02 ⏭

# முஸ்லிம் காங்கிரஸின் தோல்வி முஸ்லிம் சமூகத்தின் தோல்வி

## மு.கா பிரதித் தலைவர் ஹிஸ்புல்லாஹ்



நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் எனது தோல்வி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோல்வி முழு மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் தோல்வி என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான கலாநிதி எல்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

02 ⏭




# எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி!

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் நேற்று (26) இடம்பெற்றது. தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு நிறைவடைந்தது.

29 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட 8 அரசியல் கட்சிகளும் 1 சுயேச்சைக் குழுவும் தேர்தலில் போட்டியிட்டன.

நேற்றைய வாக்களிப்பு 48 நிலையங்களில் இடம்பெற்றதுடன், இம்முறை எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் 55,643 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

02 ⏭

# பிரித்தாளும் தந்திரோபாயங்கள் ஊடாக அரசியல் செய்கிறார்கள்

## தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் பிர்தௌஸ் நளீமி



நீண்டகாலமாக அரசியல் என்பது பிரித்தாளும் தந்திரோபாயங்களை அரசியல் வியாபாரம் செய்வதற்கு மூலதனமாக நமது அரசியல்வாதிகள் பயன்படுத்தி

02 ⏭

## அதிக கடன் வாங்கிய.........

தற்போதைய அரசாங்கம் முன்வைக்கும் வேலைத்திட்டத்தில் எந்த மூலோபாயமும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், நான் தற்போதைய ஜனாதிபதியிடம் அன்றும் சுட்டிக்காட்டினேன். அவர் முன்வைக்கும் எந்த திட்டத்திலும் எவ்வித மூலோபாயமும் இல்லை.

இலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் அதிக கடன் வாங்கியவராக தற்போது அவர் சரித்திரத்தில் இடம்பிடிக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார். இதே வேளை, எதிர்க்கட்சியை எங்களிடம் கொடுங்கள் எனவும் அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நாட்டின் பாதுகாப்பிற்கு.........

நாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி செயலகம், சர்வதேச புலனாய்வு பிரிவுகள், அமைப்புக்கள் என்பனவற்றுடனும் முப்படையினர் மற்றும் பொலிஸாருடனும் இணைந்து பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். நுவரெலியா மாவட்ட விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியுள்ளார்.

## தேங்காய் வாங்குவதற்கு............

மஹரகம நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி வரிச்சுமையை குறைப்பதாக உறுதியளித்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடிய போதிலும், அரசாங்கத்தால் வரிச்சுமையை குறைக்கவும், வரி சூத்திரத்தை மாற்றங்களை ஏற்படுத்தவும் முடியவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு இல்லாமல் வரி சூத்திரத்தை மாற்ற முடியாது என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர், ஐக்கிய மக்கள் சக்தி பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தி, வரி சூத்திரத்தை மாற்றும் நடவடிக்கைக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் வரிச்சுமையை குறைக்க எதிர்பார்த்தோம். ஆனால் மக்கள் எமக்கு அதிகாரத்தை வழங்கவில்லை. எனவே இப் பொதுத் தேர்தலில் பாராளுமன்ற பெரும்பான்மை கிடைத்தால் வரிச்சுமையை குறைத்து, மக்கள் மீதான அழுத்தத்தை குறைக்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை திருத்தப்படும் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2028 முதல் கடனை அடைப்போம் என்று IMF உடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். ஆனால் IMF எங்கள் அரசாங்கத்திடம் கடன் செலுத்துதல் காலத்தை 2033 முதல் செலுத்தினால் போதுமானதாக இருக்கும் என்று கூறியிருந்தது. நாமாகவே சென்று இந்த கால எல்லையை குறைத்துக் கொண்டோம். இது முன்னைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் எடுத்த தீர்மானமாகும். இந்தக் கடனை இன்னும் நான்கு வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். எனவே இன்னும் நான்கு வருடங்களில் மக்கள் மீண்டும் வரி செலுத்த வேண்டியுள்ளதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியின் காரணமாக மக்களிடம் பணப் புழக்கம் காணப்பட வேண்டும். ஆனால் முன்னைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கியது. இந்த சுருங்கிய பொருளாதாரத்தைக் கொண்டு எம்மால் கடன்களை செலுத்த முடியாது. எனவே இந்நாடு எதிர்கொள்ளும் கடுமையான சவால்களை ஐக்கிய மக்கள் சக்தியால் நிவர்த்திக்க முடியும். எனவே இவற்றை யதார்த்தமாக கையாளக் கூடிய பொருத்தமான அணியை வெற்றி பெறச் செய்யுமாறு சஜித் பிரேமதாச இங்கு வேண்டுகோள் விடுத்தார்.

எனவே ஐ.தே.க., ஜே.வி.பி, என்.பி.பி மற்றும் சிலிண்டருக்கு வாக்களித்த அனைவரும் நாடு குறித்து சிந்தித்து ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

## எல்பிட்டிய பிரதேச..........

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ முடிவுகள் வருமாறு,

தேசிய மக்கள் சக்தி - 17,295 வாக்குகள் - உறுப்பினர்கள் 15

ஐக்கிய மக்கள் சக்தி 7,924 வாக்குகள் - உறுப்பினர்கள் 06

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன - 3,957 வாக்குகள் - உறுப்பினர்கள் 03

பொதுஜன எக்சத் பெரமுன - 2,612 வாக்குகள் - உறுப்பினர்கள் 02

சுயேட்சைக்குழு 1 - 2,568 வாக்குகள் - உறுப்பினர்கள் 02

பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி - 1,350 வாக்குகள் - உறுப்பினர்கள் 01

தேசிய மக்கள் கட்சி - 521 வாக்குகள் - உறுப்பினர்கள் 01 பெற்றுள்ளனர்.

அரசமைப்பின் பிரகாரம் பதவிக் காலம் நிறைவடைந்துள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு உயர்நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் இத்தேர்தல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

## முஸ்லிம் காங்கிரஸின்........

காத்தான்குடி அல் அக்ஸா சதுக்கத்தில் வெள்ளிக்கிழமை (25) இடம்பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அடக்கி ஒடுக்கிய முஸ்லிம் சமூகத்தை இம் மண்ணில் இருந்து வெளியேற்றுவதற்கு அரச நிர்வாக பயங்கரவாதம் மிகத் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.
இந்த சூழ்நிலையில் ஒட்டுமொத்த மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊர்களுக்குமான ஒரு பிரதிநிதியை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு காத்தான்குடி மக்களின் தலைகளில் சுமத்தப்பட்டுள்ளது
.

## பிரித்தாலும் தந்திரோபாயங்கள்......

இருக்கிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பிர்தௌஸ் நளீமி தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை (25) காத்தான்குடி பாம் வீதியில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டத்தில் ஐக்கியப்பட்ட எதிர்காலத்தை நோக்கி எனும் தலைப்பில் உரையாற்றும் போதே இக்கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது,

1940 களில் தந்தை செல்வா தமிழரசு கட்சியை ஆரம்பிக்கும் போது ஏறாவூரிலும் ,மட்டக்களப்பு மாவட்டத்திலும், அம்பாறையிலும் முஸ்லிம் சகோதரர்கள் இணைந்து அரசியல் செய்தார்கள்.

ஆனால் அதன் பின்னரான காலப்பகுதியில் மக்கள் மத்தியில் இன ரீதியாக, மத ரீதியாக, கட்சி ரீதியாக பிரிவினைகளை உருவாக்கி தமிழர்கள் வேறாகவும்,முஸ்லிம்கள் வேறாகவும், பௌதர்கள் வேறாக பிரிந்து அரசியல் செய்யும் நிலைமையை உருவாக்கி இலாபம் கண்டார்கள்.

ஆனால் இந் நிலை மாற வேண்டும் இலங்கை தேசத்தில் பல்லின மக்கள் மத்தியிலும் ஒற்றுமை கட்டியெழுப்ப வேண்டும் அனைவரும் ஒருமித்து ஐக்கிய இலங்கையின் எதிர்காலத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# முன்னாள் ஜனாதிபதி ரணில் கூறுவது ஒரு அரசியல் “ஜோக்”

## ஓய்வூதியர்களின் தேசிய இயக்கம்

அரச ஊழியர்களுக்கு 2025 ஆம் ஆண்டில் சம்பள உயர்வை வழங்குவதற்கு தாம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அதனடிப்படையில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்குமாறும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவிடம் கோரியிருப்பது நகைப்புக்குரியதொரு விடயமாகுமென அரச ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் தேசிய உப-தலைவரும், ஓய்வு பெற்ற இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரியுமான ஏ.எல்.முகம்மட் முக்தார் கருத்து தெரிவிக்கையில்,

உதய செனவிரட்ன சம்பள மீளாய்வுக் குழு அறிக்கையின் அடிப்படையில் அரச ஊழியர்கள், ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு 2025 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தினூடாகவே சம்பள உயர்வு வழங்கப்படுமெனவும் அதற்கான நிதி வரவு - செலவுத் திட்டத்திலேயே ஒதுக்கப்படுமென முன்னாள் ஜனாதிபதி ரணில் தலைமையிலான அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டது.

இந்நிலையில், 2025 ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட தாம் நிதி ஒதுக்கியுள்ளதாகவும் அதனடிப்படையில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குமாறும் ரணில் கோருவது எப்படி?

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டதா? அதில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்புக்கான நிதி ஒதுக்கப்பட்டு விட்டதா? என்பதை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

அரச ஓய்வூதியம் பெறுவோருக்கு விசேட படியாக 3000 ரூபாவை செப்டம்பர் மாதம் முதல் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்தும் அதற்கான நிதியை திறைசேரி ஒதுக்காது அதற்கான இணக்கத்தைக் கூட பெறாது பொதுநிருவாக அமைச்சின் சுற்றறிக்கையை ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி வெளியிட்டதனால் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு செப்டம்பர் முதல் விசேட படியை பெற முடியாது போன வரலாறு முன்னாள் ஜனாதிபதி ரணிலால் உருவாக்கபட்டமையை நாம் மறந்து விடவில்லை.

இக்கொடுப்பனவு விடயத்தில் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா தலையீடு செய்து திறைசேரி அதிகாரிளுக்கு நிதியை ஒதுக்குமாறு உத்தரவிட்டதற்கமைவாக செப்டம்பர் கொடுப்பனவின்றி ஒக்டோபர் மாதம் முதல் வழங்கப்பட்டது. இதனை அவர் மறந்து விட்டாரா? என்பதையும் அறிய விரும்புகிறோம் என்றார்.

## பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் இன்றுஆரம்பம்




பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் இன்று (27) முதல் தபால்மூலம் விநியோகிக்கப்படும். எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதியுடன் வாக்காளர் அட்டை விநியோக பணிகள் நிறைவடையும். பொதுத்தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 (வியாழக்கிழமை) நடைபெறவுள்ளது. வாக்கெடுப்புக்கான சகல பணிகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு நிறைவு செய்துள்ளது. இதற்கமைய இம்முறை அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சார்பில் 5,464 வேட்பாளர்கள், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 3357 வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 8821 பேர் போட்டியிடுகின்றனர்.

# இலங்கையில் நடைபெற்ற பிரம்மாண்டமான ஸ்கை தமிழ் விருது விழா





(அலுவலக செய்தியாளர்)

பல்வேறு துறைகளிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா, ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே. எம். பாஸித் தலைமையில் சனிக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் மிக பிரம்பாண்டமாக நடைபெற்றது.

இவ் விருது விழாவில் பிரபல ஊடக ஆளுமைகள் மற்றும் பல பிரபலங்கள் கலந்து கொண்டதுடன் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், புனானை சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழக பதிவாளர் பீ.ரீ.ஏ.ஹஸ்ஸன், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், மூத்த எழுத்தாளரும், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் நஜ்முல் ஹுஸைன், சிறப்பு அதிதியாக இலக்கியச் செம்மல் கலாபூஷணம் சட்டத்தரணி ரீஷாத் எம். இம்தியாஸ், டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை மருத்துவ பணிப்பாளர் வைத்தியர் சனா, பிறை எப் எம் பிரதிப் பணிப்பாளரும் பிரபல அறிவிப்பாளருமாகிய பஷீர் அப்துல் கையூம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.கச.ஏ.ஷிப்லி, ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனின் தலைவியும் அவுஸ்த்ரேலியா நாட்டின் பெண்கள் கவுன்சிலின் தலைவியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான திருமதி மரியம் நளிமுத்தீன், மெட்ரோ லீடர் பத்திரிகையின் பணிப்பாளர் ரியாத் ஏ மஜீட் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஸ்கை தமிழ் ஊடக



வலையமைப்பினால் ஆங்கிலத்தில் புதிதாக வெளியீடு செய்யவுள்ள The Bright சஞ்சிகையின் Logo அறிமுக நிகழ்வும் அன்றைய தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது விருதுகளை பெற்றவர்களின் பெயர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு ஹாஷிம் உமர் பௌண்டேசன் சார்பில் அதன் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் மடிகணணி ஒன்றை வழங்கி வைத்தது விஷேட அம்சமாகும்.

## பாதிமா நப்ராவிற்கு சிறந்த அழகு கலை நிபுணருக்கான விருது



(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

பல்வேறு துறைகளிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா, ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே. எம். பாஸித் தலைமையில் அண்மையில் (19) தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் மிக பிரம்பாண்டமாக நடைபெற்றது.

இவ்விழாவில் அழகு கலை மற்றும் சரும பராமரிப்பாளருக்கான விருதினை எம்.என். பாத்திமா நப்ரா பெற்றுக் கொண்டார்.இவர் அழகு சாதன பொருட்களை ஒவ்வொரு பெண்களின் சருமத்திற்கு ஏற்ற வகையில் முற்றிலும் இயற்கையாக தயாரித்து வழங்குவதற்காக இவருக்கு இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது.

## மத்தியமுகாம் சின்ன மடுமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா



மத்தியமுகாம் 4ஆம் கிராமம் சின்ன மடுமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா மிக சிறப்பாக நிறைவு பெற்றது.

கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த திருவிழா ஞாயிற்றுக்கிழமை சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்திலிருந்து பக்தர்கள் பாதை யாத்திரையாக மத்தியமுகாம் சின்ன மடுமாதா ஆலயத்தை வந்தடைந்ததுடன், நற்கருணை வழிபாடும் இடம்பெற்றது.

சொறிக்கல்முனை திருத்தல பங்குத் தந்தை ஜுனோ சுலக்சன் அடிகளார், நிதிப்பொறுப்பாளர் அருட்பணி நிக்கலஸ் ஜுட் அடிகளார் ஆகியோர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தூய சின்னமடு மாதா ஆலயத்தின் திருச்சொரூப பவணி உள்வீதி வழியாக வலம் வந்து பொது மக்களுக்கான ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன், கொடி இறக்கம் செய்யப்பட்டு அன்னதானத்துடன் திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

## கூட்டுறவு சபையின் ஐக்கிய தீபம் பத்திரிகை வெளியீடு




யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையினால் ஐக்கிய தீபம் பத்திரிகை வெளியீட்டு நிகழ்வானது சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைமை காரியாலயத்தில் நடைபெற்றது.

2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் - செப்டெம்பர் மாதத்துக்கான இதழே இவ்வாறு வெளியிட்டு வைக்கப்பட்டது.

சங்கானனை பல.நோ.கூ சங்கத்தின் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த பத்திரிகை வெளியீட்டு நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் திரு.மகாதேவன், சங்கத்தின் பொது முகாமையாளர் கிருஷ்ணவேணி, சங்கத்தின் ஊழியர்கள், காரைநகர் ப.நோ.கூ.ச பொது முகாமையாளர், மானிப்பாய் சங்கானை பல.நோ.கூ.ச பணியாளர்கள், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் வெளிக்கள உத்தியோகத்தர் கௌரிதேவி, ப.நோ.கூ.ச பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், தோற்பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத்தினர், வடபிரதேச நல்லொழுக்க சம்மதனத்தின் பிரதிநிதிகள், ஐக்கிய நாணய சங்க பிரதிநிதிகள், சங்கத்தின் அங்கத்தவர்கள், பொதுச்சபை பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டுறவு அமைப்பின் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்று கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்த பத்திரிகை வெளியிடப்பட்டு வருகின்றது.

## வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக வழக்கு ஒன்று நிலுவையில் இருக்கின்றது:

# இதனை எந்தவொரு சக்தியினாலும் முறியடிக்க முடியாது

**பாறுக் ஷிஹான்**




கல்முனையை துண்டாட நினைத்து தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்க முயற்சிக்கின்ற எந்தவொரு அரசியல் சக்திக்கும் எமது கட்சி தலைமையும் எமது கட்சி உறுப்பினர்களும் இடமளிக்க மாட்டார்கள் என திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளருமான அருள்ஞானமூர்த்தி நிதான்சன் தெரிவித்தார்.

கல்முனை பகுதியில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

இந்த தேர்தல் காலங்களில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முன் வைத்து அரசியல் செய்பவர்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய நோக்கம் எனக்கு இருக்கின்றது. காரணம் யாதெனில் வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக வழக்கு ஒன்று நிலுவையில் இருக்கின்றது.இதனை எந்தவொரு சக்தியினாலும் முறியடிக்க முடியாது. இந்த வழக்கில் நாங்கள் வெற்றி பெறும் நிலைப்பாட்டில் இருக்கின்றோம்.ஆனால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் என்பவரது கூட்டம் ஒன்றில் தமிழ் மக்களுக்கு எதிரான தீவிரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த கருத்துக்கள் யாவும் ஆக்ரோஷமானதாகவும் தமிழ் முஸ்லீம் மக்களின் இனவாதத்தை தூண்டுவதாகவும் அமைந்துள்ளது. என்பதை கூற விரும்புகின்றேன்.

# வாக்களிக்கும் பெண்களின் மனநிலையில் மாற்றம் வேண்டும்

**பு.கஜிந்தன்**



பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு வாக்களிக்கும் பெண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே பெண்கள் அரசியலில் பிரகாசிக்க முடியும் என தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச் செல்வி ஸ்ரீ.பத்மநாதன் தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவு அரங்கில் சனிக்கிழமை இடம் பெற்ற வேட்பாளர்கள் பொதுமக்கள் கேள்வி பதில் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலில் ஆர்வமுள்ள பெண்களின் வகிபாவம் குறைந்து கொண்டு செல்கின்றது.

தமிழ் மக்கள் சார்ந்து எந்த ஒரு பெண் பிரதிநிதியும் கடந்த பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை.

வடக்கு மாகாணம் சார்ந்து பெண் பிரதிநிதி பாராளுமன்றம் செல்லமைக்கு ஆண்களை நான் குறை கூற விரும்பவில்லை.

அரசியல் கட்சிகளில் திறமையான பெண்களை வேட்பாளராக நிறுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு உண்மைதான் நானும் தமிழரசு கட்சியில் 10 வருடங்களாக பல்வேறு பதவி நிலைகளை வகித்தும் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் திட்டமிட்ட முறையில் மறுக்கப்பட்டது.

அனேகமான கட்சிகள் ஆண் வேட்பாளர்கள் பாராளுமன்றம் செல்வதற்காக பெண்களை வாக்கு சேகரிப்பவர்களாக பயன்படுத்துவார்கள் .

இலங்கை சனத்தொகையில் ஆண்களை விட பெண்களே சதவீதத்தில் அதிகமாக உள்ள நிலையில் பெண்களே பெண்களுக்கு வாக்களிப்பதில்லை.

ஆகவே பெண் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றம் செல்ல வேண்டுமானால் வாக்களிக்கும் பெண்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

# முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் கணிசமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும்



**(எம்.எச்.எம்.அன்வர்)**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இம்முறை கணிசமான வாக்குகளைப்பெற்று வெற்றி பெறுவதில் எவ்வித சந்தேகமுமில்லை

இவ்வாறு காத்தான்குடியில் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரும் முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் , கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் எமக்கு 33000 அளவில் வாக்குகள் இம்மாவட்டத்தில் கிடைத்தன. ஆனால் தற்போது ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசங்களில் பலமான வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். சுமார் 42000 அளவில் எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வாக்குகள் இம்மாவட்டத்தில் மக்கள் பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

சுமார் 52000 வாக்குகள் பெற்றுக்கொள்ள எமது ஆதரவாளர்கள் களத்தில் இறங்கியுள்ளார்கள் என்பதுடன் நாம் அனைவரும் ஒற்றுமைப்பட்டாலே இது சாத்தியமாகும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது முன்னாள் காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச் .எம். அஸ்பர், வர்த்தகர் எம் .ஐ.மக்பூல் மற்றும் பிரதேச ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.



புரவலர் புத்தகப் பூங்கா வெளியிட்ட நூல்கள் மற்றும் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்ட முதற் பிரதிகள் அடங்கிய ஒரு தொகுதி நூல்கள் ஸ்கை தமிழ் வலையமைப்பின் ஊடாக அதன் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் உட்பட குழுவினர் செவ்வாய்க்கிழமை (22) கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து கல்லூரி முதல்வர் எம்.ஐ ஜாபிரிடம் ஒப்படைப்பதை காணலாம் **(படம் : எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

**2024 பொதுத் தேர்தலில்**
**இம்முறை போட்டியிடும் உங்களின்**
**அல்லது உங்கள் கட்சியின் விளம்பரங்கள்**
**துண்டு பிரசுரங்கள் சஞ்சிகைகள்**
**மற்றும் சுவரொட்டிகளை எமது**
**பத்திரிகையின் ஊடாக தெரியப்படுத்தி**
**உங்களைப் பற்றி நாட்டுக்கு**
**எடுத்துக் கூற நாம் தயார்.**

**கூடுதலாக மக்கள் ஆதரவினை பெற**
**நியாயமான கட்டணத்தில் விளம்பரங்களை**
**பிரசுரிக்க தொடர்பு கொள்ளவும்**
**0779007738, 0772539298**

# ஸஹிரியன் பிரீமியர் லீக் அங்குரார்ப்பன நிகழ்வு

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு பாடசாலை பழைய மாணவர்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ஸஹிரியன் பிரீமியர் லீக் 2024 மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடர் வெள்ளிக்கிழமை (25) ஆரம்பமானது

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் பாடசாலை பழைய மாணவர்கள் சங்க செயலாளர் சட்டமுதுமானி ஷ.்.பி எச்.இஸ்மாயில், பிரதித் தலைவர் பொறியியலாளர் ஏ.ஆர்.எம்.பர்ஹான், பொருளாளர் தொழிலதிபர் எம்.எம்.றிஸ்மீர் உள்ளிட்ட பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதிகள், பாடசாலை சமூகம் என பலரும் கலந்து கொண்டனர். இச்சுற்றுத் தொடரில் 32 அணிகள் போதுகின்றன. அணிக்கு 6 ஓவர் பகல், இரவு போட்டியாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.































